**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 135/2019**

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 11.02.2026 | | |
| பெயர்: | ராஜேந்திரன் (DW–2 Cross ) | தகப்பனார் பெயர்: | ராமகிருஷ்ணன் |
| கிராமம்: | வில்லராயன்நத்தம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 58/2026 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 11.02.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 11.52)**

1. நான் சாட்சியமளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிதான் அழைத்து வந்தார் என்றாலும் சரிதான். பிரதிவாதி எனது அத்தை மகன். எனது முதல் விசாரணை பிரதிவாதி சொல்ல சொல்ல தட்டச்சு செய்யப்பட்டது. வெல்லவராயநத்தம் என்பது காலப்போக்கில் வில்வராயன்நத்தம் என்று மாறிவிட்டது என்றால் சரியல்ல.

2. வில்வராயன்நத்தம் என்பது செம்மங்குடி கிராமத்தின் உள்கிராமம் என்றால் சரிதான். அந்த தெரு என்பது ஆதிதிராவிடர் தெரு என்றால் சரிதான். அதில் உள்ள மனைகள் நத்தம் ஜாரி என்றால் சரிதான். அங்கு யார் யார் வசித்து வந்தார்களோ, அந்தந்த இடத்திற்கு பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரிதான், அந்த பட்டா ஆதிதிராவிடர் நலத்துறை சார்பாக கொடுக்கப்பட்டது.

3. எனக்கு மனை எண்.22 ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு மேற்கு பக்கத்தில் பட்டா உள்ளது, அதற்கு கிழக்கு பக்கத்தில் பிரதிவாதிக்கு பட்டா உள்ளது. நான் எனது முதல் விசாரணையில் மனை எண்.32 என

என்னுடைய மனையை குறிப்பிட்டிருந்தால் தவறு, ஆனால் அது எனது தாயார் பெயரில் உள்ள மனை.

4. மனை எண்.32க்கு கிழக்கில் யார் மனை உள்ளது என்றால் தெரியாது. (ஆனால் சாட்சி தற்போது செல்லம்மாள் மனை உள்ளதாக கூறுகிறார்). வள்ளுவர் தெருவில் கிழக்கு மேற்காக சாலை உள்ளது. ஆனால் வில்வராயநத்தம் வேறு, வள்ளுவர் தெரு என்பது வேறு. கிழக்கு மேற்காக உள்ள சாலையில் தெற்கு பக்கத்தில் மனை எண்.32,33,34,35 உள்ளது என்றால் சரிதான்.

5. மனை எண்.32,33,34,35 மனைகளுக்கு தெற்கில் வாதியின் நஞ்சை வயல் உள்ளது என்றால் சரிதான். வாதிக்கு மனை எண்.34ல் மின் மோட்டார் உள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட நஞ்சை வயல் மற்றும் மின் மோட்டார் வாதிக்கு சொந்தமாக சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது. மனை எண்.32 எனது தாயாருக்கு சொந்தமானது என்பதற்கான ஆவணங்கள் ஏதும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. மனை எண்.32 எனது வசத்திலும் அனுபவத்திலும் உள்ளதற்கு ஆவணங்கள் ஏதும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை.

6. வில்வராயநத்தத்தில் உள்ள மனைகள் ஆதிதிராவிட நலத்துறையின் கீழ் கொடுக்கப்படவில்லை, நத்தம் ஜாரியில் தான் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதனால்தான் எனக்கு சொந்தமான மனை எண்.22ற்கான ஆவணங்கள் ஏதும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனை எண்.34,35ஐ வாதி, முத்துகிருஷ்ணன் மகன் சம்மந்தம் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

7. வில்வராயநத்தம் சாலை சிமெண்ட்டால் போடப்பட்டுள்ளது. அந்த சாலை 10 அடி அகலத்திற்கு உள்ளது என்றால் சரிதான். 10 அடி அகல ரோட்டிற்கு இரு பக்கமும் 4 அடி இடைவெளி விடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த சாலை வழியாக கார், டிராக்டர் போன்ற வாகனங்கள் செல்ல முடியாது என்று நான்

கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல.

8. வில்வராயநத்தத்திற்கு பட்டா கொடுத்தபிறகு அதற்கு வள்ளுவர் தெரு என்று பெயர் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. யார் யாருக்கு பட்டா கொடுக்கப்பட்டதோ அவர்களுக்கு அளந்துதான் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, ஒப்படைப்பு பத்திரம் தான் கொடுக்கப்பட்டுள்ளது, இன்னும் பட்டா கொடுக்கவில்லை. ஆதிதிராவிட நலத்துறையின் கீழ் கொடுக்கப்பட்ட மனையை தான் விற்க முடியாது, ஆனால் நத்தம் ஜாரி மனையை விற்கலாம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

9. நான் எனது முதல் விசாரணையில் இவ்வழக்கு சொத்து பிரதிவாதியின் வசத்தில் இல்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து வாதியின் வசத்தில் உள்ளது என்பதால் நான் உண்மையை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி 34,35 மனையை அனுபவிப்பதை பிரதிவாதியான எனது அத்தை மகனுடன் சேர்ந்து அதற்கு தடை ஏற்படுத்தும் நோக்கத்தில் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்–12.21)**